7th December 1961]

Sri M. K. MARIAPPAN : கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தில் தலையாரி, வெட்டியான் இவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? இல்லையென்றால் அவர்கள் தங்களுக்குள் ஒரு சங்கத்தை அமைத்துக்கொண்டால் அதற்கு சர்க்கார் அங்கீகாரம் அளிப்பார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : வில்லேஜ் சர்வெண்ட்ஸ் என்ற காடிகரியில் அவர்களும் வருகிறார்கள்.

Deaths due to rat-poisoning

***2145 Q.—Sri S. M. ANNAMALAI** : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம்மா நிலத்தில் 1961-ம் ஆண்டில் இதுவரை எத்தனை பேர்கள் எலிபாஷாணம், மூட்டைப்பூச்சி மருந்து தின்றதினால் இறந்துள்ளனர்?

The Hon. Sri M. A. MANICKAVELU : No information is available, as deaths due to these causes are not separately registered.

Sri S. M. ANNAMALAI : அடிக்கடி பத்திரிகையில் மூட்டைப் பூச்சி மருந்தை உண்டு பலர் மரிப்பதாகச் செய்திகள் வருகின்றனவே. இந்தத் தற்கொலைகளைத் தடுக்க மூட்டைப் பூச்சி மருந்து விற்பனையைக் கட்டுப்படுத்த சர்க்கார் முன்வருவார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த மருந்து வழங்குவதில் கடுமையான ஏற்பாடு இருக்கிறது. அதோடு இந்த உலகத்தைவிட்டு மேல் உலகத்திற்குப் போக வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டவர்களை எப்படிப் பாதுகாப்பது? கூடிய வரையில் பாதுகாக்கிறோம்.

Karugamputhur Panchayat Board

***2146 Q.—Sri V. K. KOTHANDARAMAN** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, வேலூர் தாலுகா கருகம்புத்தூர் பஞ்சாயத்து போர்டு தலைவர்பேரில் மேற்படி பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் புகார் லெட்டர் வந்ததா?

(இ) என்னென்ன புகார், என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(உ) இல்லையென்றால், அதற்கான காரணமென்ன?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) Yes, Sir. Several petitions have been received by the Collector of North Arcot.

[7th December 1961

(இ) A statement[a] containing the allegations against the President of the Karugamputhur Panchayat is placed on the table of the House.

The Collector as the Inspector of Panchayats is taking action against the president after calling for a detailed report from the Regional Inspector of Municipal Councils and Local Boards, North Arcot.

(உ) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : கருகம்புத்தூர் பஞ்சாயத்துத் தலைவர் பேரில் திட்டவட்டமான குற்றச்சாட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்தில் தீர்மானம் போடாமல் காண்டிராக்ட் அளிப்பது, வேண்டாதவர்களுக்கு மீட்டிங் சர்குலர் அனுப்புவது கிடையாது, அக்ரிகல்சரல் . . . (குறுக்கீடு) இப்படி பல குற்றச்சாட்டுகளைக் கொடுத்தும் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன ? அவர் நடத்தக்கூடிய தொழிலுக்கு ஜோசப் என்ற பெயர் கொடுத்துக்கொண்டிருப்பதும் தெரிவித்திருக்கையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதிருக்கக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பேரில் சட்டப்படிதான் நடவடிக்கை எடுக்க முடியும். புகார் வந்தவுடன் அவர்கள் தலையை வெட்டிவிட முடியாது. இதைப்பற்றி அவர்களிடம் தக்க சமாதானம் கோர வேண்டும். பிறகு அதன்பேரில் பஞ்சாயத்து என்ன முடிவு செய்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். அவசரப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு இல்லை.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களில் நிர்வாகக் குறைகள் அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்ட பிறகு, அரசாங்க இலாகாக்களின் பங்கீட்டு முறை, ஆபீஸ் ஆப் தி இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ், செக்ரடேரியட் என்று தனித்தனியாக இரண்டு இலாகாக்கள் இருப்பதால் ஒரு குழப்பமான நிலைமை ஏற்படுகிற காரணத்தால் நல்ல முறையில் செயல்பட முடியவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதை பரிசீலனை செய்து நல்லமுறையில் அமைக்க கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதனால் குழப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதாவது குழப்பம் இருந்தால், அதை கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால், அதைப்பற்றி கவனிக்க முடியும். இப்போது இந்த சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு கலெக்டர் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

---

[a] Printed as Appendix III on page 110 infra.